ஸ்ரீஜகத் ஜவஹர்லால் நேரு, T. பிரகாசம்,
டாக்டர் S. S. ராஜன், ருக்மணி லக்ஷிமிபதி,
தமிழ் நாட்டில் பல தலைவர்கள்

அரஸ்டு பாட்டு



தேச தொண்டர் K. T. R. வேணுகோபால் தாஸ்
எழுதியது

V. R. பெருமாள் நாயுடு
பிரசுரம் செய்யப்பட்டது.

3 Copies
IMPERIAL RECORD DEPARTMENT
2911
Tamil

பாரதமாதா துணே.

விவசாய இலாகா மந்திரி

T. பிரகாசம் அவர் பேரில் கீதம்

இந்து நேசவங்க தேச என்ற மெட்டு

ஆந்திர பிரகாச சிங்கம்
அவனியில் சிறை சென்றனர்
சாந்தமாக கோஷம் செய்து
சாக்காரை எதிரித்தனர்
இந்தியா சுதந்திறமே
அடைந்திட முயன்றனர்
காந்தியின்-சொல்வாக்கியத்தை
காலத்தில் மதித்தனர் (ஆ)

தொகைரா

ஏழையாம் விவசாய, மந்திரியாகவே
இனியிலாதொண்டு செய்தார்
கோழைகள் வாங்கிடும் அதிக வட்டியை
குறைக்கவே தொண்டு செய்தார்
பாழான பஞ்சத்தால் பதரியே துடித்திடும்
பாமரமக்களே நேரினில் கண்டார்
கழனியில் வேலேயே-செய்யாதமக்களின்
கஷ்டமே நிவர்த்தி செய்தார்

பாட்டு

நூற்றுக்கு-எட்டணு விகிதம்
கடன் மசோதா செய்த புனிதன் (ஆந்)

தொகைரா

ஆயிரத்தொளாயிரத்து ஆனதோர் நாற்பதில்
அரஸ்தாகி முன் சென்றார்
நேயரும் பலமுறை தேசத்திர்க்காகவே

NATIONAL ARCHIVES LIBRARY
No 2911
Date 7.3.72
GOVT. OF INDIA

நன்பரும் சிறைநுழைந்தார்
சுயராஜ்யா பேப்பரில்-சொத்துகள் பரிமுதல்
ஏராள பொருள் இழந்தார்
பயமில்லா வீரனாய்—பாரதமக்கட்க்கு
தேசியம் எடுத்துரைத்தார்

பாட்டு

சுதந்திர கவிநிபூணன்
ஜெகந்தனில் புகழ்வேணுதீரன் (ஆ)

வைத்ய இலாகா மந்திரி

டாக்டர் S. S. ராஜன் பேரில்

தேசிய கீதம்

ஆலம்படைத்தவனே என்ற மெட்டு

டாக்டர் ராஜன் சிறை
சென்றார்—காந்தி
வார்த்தையே உணர்ந்தார்
மிக்கபுகழ்படைத்த—தலைவர்களில் முதல்வராம்
மந்திரியாக இன்று தொண்டுகளை செய்தவராம்
திருச்சி நகர்தனிலே-பிறந்த
தேசாபிமாணியாய் வாழ்ந்த (டா)

காந்திமகானுரைத்த கட்டளையே பின்தொடர்ந்தார்
கோஷங்களை யமைந்து நோட்டிசை யேதானளித்தார்
சட்டமதையெ திர்தார் உலகில்
சிறைதனில் நுழைந்தார் (டா)

சுகாதார முறையில் ஜெகந்தனிலே சீர்திருத்தி
சோதரர்காக பல நன்மைகளை யேநடத்தி
பாரத நாட்டு வீரன்—செந்தமிழல்
பாடிடும் வேணுதயாளண்

ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி

அவர்கள்பேரில் தேசியப் பாட்டு

சிறைவாயில் தனில் என்ற மெட்டு

பல்லவி

சிறைதனிலே நுழைந்தார்
ருக்மணி அம்மாள் (சி)

அநுபல்லவி

குறைவிலாசெல்வி குடும்ப மேதாவி
காந்திமகான் துணைவி-பெண்களில் சிங்கம் (சிறை)

தொகையுறு

ஆயிரத்தொளாயிரத்து ஆண்டு முப்பத்தொன்றில்
உப்பு சத்யாகிரகம் செய்தார்
பயங்கரபோரினில் கள்ளுக்கடை மரியலில்
பாங்காங்கே தியாகம் செய்தார்
சுயராஜ்யம் பெரவே சீமைதுணி மரியலில்
சாக்கடை தண்ணீர் அடிததார்
ஜெயமது பெரவே ருக்மணி லக்ஷ்மிபதி
தேசத்திற்கே உழைத்தார்

பாட்டு

சந்தச்சாபநாதம்-சங்கீத வேணுகீதம்
சாற்றும் சுதந்திரமே-உலகமதி

அகில இந்திய காங்ரஸ் அடக்கமிட்டி தலைவர்

ஸ்ரீமத் சர்தார் படேல்

தேசிய கீதம்

சிறைபுகுந்த மனமே என்ற மெட்டு

சர்தார் சிறைபுகுந்தார்—இன்னாட்டில்
சத்யாக்கிரஹம் புரிந்தார்—லெக்சர்
கர்ஜனையே பொழிந்தார்—உதவிசெய்ய
கூடாதெனவே துணிந்தார்—உலகில் (சர்)

தொகையரு

குஜிராத்தி நகரில் குடிவி வசாயிகளும்
கட்டாகமரியல் செய்தார்
வஜிகரமே இல்லாதால் வரிகொடா. இயக்கமே
வையகத்தில் முன்செய்தார்

பாட்டு

சுதர் கொடியே பரக்க—அவனியில்
கண்டவர் மனங்களிக்க—யுத்தம்
பாதகமே நடக்க—அதைஎதிர்த்து
போரினிலே மரிக்க—இன்னாட்டில் (சுதர்)

தொகையரா

காந்தியின் கட்டளை போலவே உலகினில்
நிர்மான திட்டம் செய்தார்
சாந்தமாய் நீங்களும் சர்க்காவை சுற்றினல்
சுயராஜ்யமே பெருவீர்

பாட்டு

இந்துச கோதரரே இனிமேல்
எல்லோரும் சேர்வீரே
சந்ததகவிபுனர்வீர்-வேணு
சுதந்திரமே அடைவீர்-இன்னாட்டில்

காங்ரஸ் தலைவர்கள் மாஜிமந்திரிகள்
வாயார வாழ்து வோமே என்ற மெட்டு

ஸ்ரீமான் ஜவஹரை நாமே சந்தோஷமாய் பணிவோமே
கோமன்வருகை நலமே கொண்டாடி வரவேற்பளிப்போமே-ஸ்ரீ

பாட்டு

தேசம் புகழ்ந்திடும் தீரர் தேசாபிமான குபேரர்
மாசற்ற ஞான வீரர் மாணிட ஜென்ம தயாளர் ஸ்ரீ

தொகையரு

தாய்நாட்டு புதல்வராய் தென்தேச மக்கட்க்கு
தேசிய ஊட்ட வந்தார்
செய்முறை வெற்றியாய் சிலோனை விடுத்து இன்று
சென்னைக்கே ஓடிவந்தார்

பாட்டு

உலகம் புகழ் யதார்த்தி உண்மையை கடைபிடித்தமூர்த்தி
கலைஞானமேவும் கீர்த்தி காருண்யதேசமே விர்த்தி ஸ்ரீ

தொகையரு

மன்னரின் புதல்வரும் பிரன்ஸ்சாபில்சுடனே முன்
மகிக்ஷியாய் படித்து வந்தார்
கண்டவர் போற்றிடும் காங்கரேஸ் தலைவராய்
கக்ஷியை பரவசெய்தார்

பாட்டு

வாலிப கக்ஷித்தலைவர் வாழி நீடூழி ஜவஹர
கோரும் சுயாக்ஷி ஓங்க கவிராஜன் வேணு தமிழாக ஸ்ரீ

ஐயா சிறுப்பெண் என்ற மெட்டு

அந்தோ ஜவஹர் லாலை யின்று அரஸ்டு செய்தனரே
அரியாதனமாய் உலகமதில் சேதி சொன்னரே சிறை
சாலை சென்றனரே அ

முடிசூடா மன்னரென அவனியில் புகழ்ந்தார்
மக்கள சுகம் பெறவே பிரசங்கம் புரிந்தார்
அவசரமாகவல்லோ வாரண்டு தந்தார் நம்
தேசியதலைவர்களை இம்சையே புரிந்தார் கடுங்
காவலில் அடைத்தார் அ

காந்தியுடன் வார்தாவில் பேசியே வந்தார்
காலமதிலே நடக்கும் விஷயத்தை தனர்ந்தார்
அலகாபாத் ரயிலேரி நடுவழி சென்றார்
அரசாங்கத்தாரும் பின்தொடர்ந்து பிடித்திடவந்தார்
கண்டு மனமது துணிந்தார் அ

கோரக்பூர் பிரசங்கத்தில் பேசியதாலே
கோரமாகவே நடக்கும் வாதத்திலைே
உதவிசெய்ய கூடாதென சொன்னதிலைே கேள்
உத்தரவு மீறி இவர் பேசியதாலே சட்டம்
தந்தார் பின்னாலே அ
உலகமதல் ஜவஹர் போலே தியாகியுமேது
உண்மையாக நடக்கும் சேதி சொன்னாரப்போது
அதை யுணர்ந்த ஜட்ஜியவர் சொன்னதை யோது
நான்கு வருடமென கடுங்காவலில் வைத்தாரப்போது
வேணு கவிகளை யோது அ

ராட்டினமே என்ற மெட்டு

தேசிய தங்கமே ஜவஹர்
நேரு சிங்கமே
மாசிலாத மோதிலாலின் திவ்யசுதனே நம்
பாரதத்தாய் வீரசக்தி வாய்ந்த போதனே
ஸ்ரீ காருண்யனே ஜெய லாவண்யனே
தொண்டர் படை வீரனே எங்கும் புகழ் தீரனே
ஆனந்த பவனமதில் வாழ்ந்துவந்தவர் சொந்த
ஆஸ்திகளை தேசத்திற்க் கர்ப்பணம் செய்தவர்
எங்கும் புகழ்ந்தவர் ஏழைக்குகந்தவர்
எல்லோர்க்கும் நல்லவர் இந்து சங்கமானவர் தே

மறியல்செய்து சிறை சென்ற மகா புண்ணியன் நம்
காந்திமகான் கட்டளைக்குகந்த கண்ணியன்
உலகம் புகழ் லாவண்யன் உத்தம புண்ணியன்
காங்ரேஸ் வீரன் ஜனசமூக தீரன்
முப்பது கோடி டாலர் கடன் தந்தவர் அதை
ஏப்பமிட்ட வீனரை எதிர்க்க வந்தவர்
சிறைசாலை சென்றவர் தேசமெங்கும் புகழ்ந்தவர்
வேணுகவி கொண்டவர் புவி எங்கும் சென்றனர் தே

எம் எல் ஏ மெம்பர்கள் தொண்டர்கள்

அரஸ்டு ரிஸல்ட்டு

ஸ்ரீஜத்-ஜவர்லால் நேரு	4—வருடம்
ஸ்ரீஜத்-சர்தார் படேல்	1 ,,
ஸ்ரீஜத்-விநோபா	3 மாதம்
ஸ்ரீஜத்-பிரம்மதத்தர்	1 ,,
மாஜிமந்திரி-பண்டித பந்த்	1 ,,
பம்பாய் முதல் மந்திரி ஸ்ரீகேர் - விஜாரணை இல்லை	

தமிழ்நாடு தலைவர்கள் விபரம்

விவசாய இலாகா மந்திரி டி. ஸ்ரீஜத்-பிரகாசம்-1—வருடம்
வைத்திய லாகாமந்திரி டாக்டர் எஸ். எஸ். ராஜன் 1--வருடம்
1000-ரூபாய் அபராதம்

ஸ்ரீமான்—லக்ஷ்மிபதி	6 மாதம்
ஸ்ரீ-கிருஷ்ணமூர்த்தி	6 ,,
ஸ்ரீமதி-ருக்மணி லக்ஷ்மிபதி	1—வருடம்
தஞ்சை ஜில்லா எம். எல். ஏ.	
பூவராகவனுக்கு	1 ,,
கோவை ஜில்லா எம். எல். ஏ.	
என். ஜி. ராமசாமி கைதியானார்	
திருச்சி மேயர் எம். எல். ஏ.	
ரத்தினவேலு தேவர்	1 ,,
மதுரை ஜில்லா எம். எல். ஏ.	
ஸ்ரீகிருஷ்ணசாமி பாரதி	1 ,,
தண்ணீதொட்டி டிவிஷன்	
குப்புசாமி, பண்டிதராமன்ஜாலு தலா	6—மாதம்
பகவத்சிங் தேசியசபை காரியதரிசி	

இன்னும் மற்றவர் விபரம் இரண்டாம் பாகத்தில் பார்க்கவும்

ஸ்ரீனிவாஸ் பிரஸ், 114. சைனாபஜார் ரோட், சென்னை.